பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள் எட்டு

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

க. பொ. த.
சாதாரணதர
மாணவருக்கான
வரலாறும்
சமூகக்கல்வியும்
விடைகள்
நாளை மறுதினம்
வெளிவரும்

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 புரட்டாதி 07 சனிக்கிழமை (23-9-2000) தொ. பேசி;- 3378 ஒலி: 278

## ★ தேர்தல் பிரச்சாரம் சூடு பிடிக்கும்வேளை
# தற்கொலைக் குண்டுதாரிகளால்
# கொழும்பு மாநகரெங்கும் கலக்கம்!

## விடுதி உரிமையாளர்களுக்கு பிரதிப்பொலிஸ்மா அதிபர் எச்சரிக்கை

(கொழும்பு விசேட நிருபர்)

தலைநகர் கொழும்பில் விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படைப் போராளிகள் ஊடுருவியுள்ளார்கள் என்றசந்தேகத்தின் பேரில் நகரின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கு பொலிஸ் திணைக்களம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

இந்த நடவடிக்கையின் ஒரு அங்கமாக கொழும்பிலுள்ள நூறுலொட்ஜ் களின் உரிமையாளர்களைப் பிரதிப் பொலிஸ்மா அதிபர்போதி லியனகே அழைத்து அவர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.

இக்கலந்துரையாடல்களில் கொழும்புமாவட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விடுதலைப் புலிகளின் ஊடுருவல்களை கட்டுப்படுத்துவது தொடர்பான வழிவகைகள் 'லொட்ஜ்' உரிமையாளர்களுடனான சந்திப்பின் போது ஆராயப்பட்டது.

வடக்குக் கிழக்கில் இருந்து கொழும்பில்வந்துதங்கும் தமிழர்களை உடனடியாக தங்குவதற்கு அனுமதிவழங்காது, அவர்கள் குறித்து நன்கு தெரிந்த பின்னர் தங்குவதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்றும் அதற்குரிய ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென்றும் தங்குபவர்கள் உடன் பொலிஸ்நிலையம்

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஜூன் 30-ந் திகதிக்கு முற்பட்ட கப்பல் பயண அனுமதிகள் ரத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கு கப்பல் மூலம் பயணம் செய்வதற்காக ஜூன் மாதம் 30-ந் திகதிக்கு முன்னர் பயண அனுமதி பெற்றவர்களின் பயண அனுமதிகள் யாவும் ஒக்டோபர் மாதம் முதலாந் திகதி முதல் செல்லுபடியாகாது என யாழ். சிவில் நிர்வாகக் காரியாலயம் அறிவித்துள்ளது.

ஜூன்மாதம் 30-ந்திகதிக்கு முன்னதாக பயண அனுமதி பெற்றவர்கள் இனிமேல் கப்பலில் பயணம் செய்ய வேண்டுமாயின் புதிதாக பயண அனுமதிக்கு விண்ணப்பிக்க வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இம்மாதஇறுதியில் விசேட பயணிகள் கப்பல் சேவையில் ஈடுபடுமெனவும் சிவில் நிர்வாகக் காரியாலயம் மேலும் அறிவித்துள்ளது. (ந)

## ★ தேர்தலுக்கு முன்னதாகவோ தேர்தலின் போதோ
# தமிழ்குழுக்களிடமிருந்து ஆயுதங்களைளையும் உத்தேசம் அரசிற்கில்லை

(கொழும்பு)

பொதுத் தேர்தலுக்கு முன்பாகவோ தேர்தல் நடைபெறும்வேளையிலோ ஜனநாயக வழிக்குத் திரும்பிய தமிழ்க் கட்சிகள் தமிழ்க் குழுக்களிடம் இருக்கும் ஆயுதங்களை களையும் உத்தேசம் அரசிற்கு கிடையாது என்று எரிபொருள் மின்சக்தி அமைச்சரும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான ஜெனரல் அனுருத்த ரத்வத்த பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அமைச்சர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

தமிழ்க்குழுக்களிடமும்கட்சிகளிடமும்ஆயுதங்களை களைய வேண்டுமென்று எல்லோரும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கின் பிரபல பத்திரிகையாளர்
# ஜவ்பர்கான் மீது தாக்குதல்
## துப்பாக்கியாலும் சுடப்பட்டார்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தின் பிரபல பத்திரிகையாளர் ரி.எல். ஜவ்பர்கான் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் பொது ஜன ஐக்கிய முன்னணி கட்சிகளின் ஆதரவாளர்களால் படுமோசமாகத்தாக்கப்பட்டதுடன் துப்பாக்கியாலும் சுடப்பட்டார்.

தபால் தொடர்புகள் பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா கலந்து கொண்ட வைபவம் ஒன்றில் செய்தி சேகரிக்கச் சென்றபொழுதேஇச்சம்பவம் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுநண்பகல் காத்தான்குடியில் இடம்பெற்ற இச் சம்பவம் குறித்து பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கிழக்கு பிராந்திய அலுவலகத்தின் பொறுப்பு வாய்ந்த அதிகாரியாகப் பணிபுரிந்து வரும்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வ.கி.மா. வேலையற்ற

தமிழ்க் கட்சிகள் தமிழ்க் குழுக்களிடம் இருக்கும் ஆயுதங்களை களையும் உத்தே

ரிகைகளுக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.
அப்பேட்டியில் அமைச்சர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர்களின் சம்பள நிலுவைக்கு 50 மில்லியன் ரூபா வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

வடகிழக்கு மாகாணத்தில் பணியாற்றும் பதவி உயர்வு பெற்ற மற்றும் பதவி நிரந்தர மாக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சம்பள நிலுவையை உடன் வழங்குவதற்கென வடகிழக்கு மாகாண சபையிடம் 50 மில்லியன் ரூபா வழங்கப் படவுள்ளது.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவரும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான டகிளஸ்தேவானந்தா ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டதைய டுத்தே திறைசேரித் தலைவர்களுக்கு இப்பணிப்புரை விடுக்கப் பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை இலங்கைத் தமிழ் ஆசிரிய சங்கப் பிரதிநிதிகள் டகளஸ்தேவானந்தாவைச் சந்தித்து இது குறித்து விளக்கியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது (ந)

## ஆணையிறவு பிடிக்கப்படுமாம்

(கொழும்பு)

எதிர்வரும்10 ஆம்திகதிநடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கு முன்னதாக படையினர் ஆணையிறவுப் பாதையைக் கைப்பற்றி விடுவார்கள் என பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்துள்ளார். (வ)

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

(வவுனியா)

கடந்த18 ஆம்திகதிகிளாலி, ஊரெழுப் பகுதியில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில்

★ 2ஆம் லெப்டினன்ட் தீபன் (சங்கரப்பிள்ளை அகிலன்) யாழ்.மாவட்டம்

★ மேஜர் சபேசன் (சிதம்பரப்பிள்ளை சிவநாதன்) யாழ். மாவட்டம்

ஆகிய இரு போராளிகள் தமது தரப்பில் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (ந-5)

## ★இந்தோனேசியாவில் யாழ்.இளைஞர் இருவரின் உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

(மட்டக்களப்பு)

இந்தோனேசியாவில் அகதி அந்தஸ்து கோரி சாகும் வரை உண்ணாவிரதமிருந்த யாழ்ப்பாண இளைஞர் இருவர் நேற்று தமது உண்ணாவிரத போராட்டத்தை இடைநிறுத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

ஐரோப்பிய நாடு ஒன்றுக்கு செல்வதற்காக இந்தோனேசியாவில் தங்கியிருந்த பரமலிங்கம் கண்ணதாசன், கந்தசாமி கங்காதரன் ஆகியோரே உண்ணாவிரதம் இருந்த

(8 ஆம் பக்கம் பார்க்க)

வ.கி.மா. வேலையற்ற

## பட்டதாரிகளுக்கு கணனிப் பயிற்சி விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(திருகோணமலை)

வடக்குக கிழக்குமாகாணத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கு கணனிப் பயிற்சியினை வழங்க மாகாண கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

இப் பயிற்சிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் முழுப் பெயர், விலாசம் பட்டம் பெற்றதுறை, பட்டம் பெற்ற காலம், பல் கலைக்கழகம், பயிற்சி பெறவிரும்பும் பிரதேசம் ஆகிய விபரங்களை உள்ளடக்கியதாக விண்ணப்பங்களைத் தயாரித்து 'செயலாளர்' கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சு, வடக்குக் கிழக்கு மாகாண சபை, திருகோணமலை என்ற முகவரிக்கு அடுத்தமாதம்5 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளர்க.பரமேஸ்வரன் கேட்டுள்ளார். (ந)

## வெலிக்கடைச் சிறையிலிருந்து கைதிகள் தப்பியோடலாம்?

### பாதுகாப்பு பலப்படுத்தப்படுகிறது

வெலிக்கடைச் சிறைச்சாலையின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் பொதுத் தேர்தலை ஒட்டி வெலிக்கடை சிறைச்சாலையில் வைக்கப் பட்டுள்ள படுமோசமான குற்றங்களைப் புரிந்த கைதிகளை மீட்பதற்கு முயற்சிகள் நடைபெறுவதாக கிடைத்த செய்திகளை அடுத்தே வெலிக்கடைச் சிறைச்சாலையின் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

இரத்தினபுரியின் குருவிட்ட சிறைச்சாலையில் இருந்து 9 கைதிகள் தப்பியோடியமையும் பின்னர் அவர்கள் கைது செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். (வ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய்

## ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி (ஈ. பி. டி. பி.)

### பொறுப்பேற்று மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி

# வேலைத்திட்டங்கள் -2000



ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியினராகிய நாம் மக்களால் தெரிவு செய்யப்பட்டு உள்ளூராட்சி சபைகள் மூலம் மக்களின் தேவைகளை அறிந்து அதற்கேற்ற வகையில் அவற்றை நிறைவேற்றி வருகின்றோம். எமது ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புகுழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய கௌரவ கே. என். டக்ளஸ் தேவானந்தா அவர்களின் நேரடி வழிநடத்தலின் மூலமும், யாழ். மாவட்ட பிரதம அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமாகிய திரு. கே. வி. குகேந்திரன் (ஜெகன்) அவர்களின் துரிதமான செயற்பாட்டினாலும், எமது சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்களின் ஒத்துழைப்பால், எமது பிரதேச மக்களின் முழுமையான ஆதரவோடும், நாம் இதுவரை எமது பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி புனரமைப்பு வேலைத் திட்டங்களை இப் பத்திரிகை வாயிலாக உங்கள் முன் சமர்ப்பிக்கின்றோம்.

என்றும் மக்கள் சேவைக்குரிய,

திரு. வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன்
[சமாதான நீதவான், உத்தியோகப் பற்றற்ற நீதிபதி]
தலைவர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

திரு. பிரான்சிஸ் விக்டர்,
செயலாளர்,
வலிகாமம் தென் மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

| | தொகை |
|---|---|
| விசேட நிதி 1998,1999 இல் செய்து முடிக்கப்பட்ட வேலைத் திட்டங்கள்-29 வேலைகள் | 3000,000 00 |
| 1998ஆம் ஆண்டுபன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டநிதியிலிருந்துசெய்யப்பட்டவேலைகள்-02 | 115,000 00 |
| 1998 ஆம் ஆண்டு பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியிலிருந்து செய்யப்பட்டவேலைகள்-07 | 425,000 00 |
| 1998 ஆம் ஆண்டு புனர்வாழ்வு.புனரமைப்பு அதிகார சபை வடக்கு(றான்) நிதியிலிருந்து செய்யப்பட்ட வேலைகள்-14 | 1375,000 00 |
| 1999 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து செய்யப்பட்ட வேலைகள்-08 | 230,000 00 |
| 1999 ஆம் ஆண்டு பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியிலிருந்துசெய்யப்பட்டவேலைகள்-04 | 215,000 00 |
| 1999 ஆம் ஆண்டு புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபை வடக்கு (றான்)நிதியிலிருந்து செய்யப்பட்ட வேலை-01 | 300,000 00 |
| யுனிசெவ் நிதியால் 1998 இல் செய்யப்பட்ட வேலைகள்-2 | 907,750 00 |
| யூ. என். டி. பி. நிதியில் 1998 இல் செய்யப்பட்ட வேலைகள்-01 | 3902,500 00 |
| 1998 ஆம் ஆண்டு சபை நிதியிலிருந்து செய்யப்பட்ட வேலைகள்-2 | 10,450 00 |
| 1999 ஆம் ஆண்டு சபை நிதியிலிருந்து செய்யப்பட்ட வேலைகள்-12 | 537,500 00 |

| | | தொகை |
|---|---|---|
| 16) | காந்திஜி ச ச. நிலையம் புனரமைப்பு மாதகல் | 50,000 00 |
| 17) | சாந்தை முன்பள்ளி பாடசாலை தளபாடம் வழங்கல் | 25,000 00 |
| 18) | சரஸ்வதி ச. ச. நிலைய புனரமைப்பு பிரான்பற்று | 35,000 00 |
| 19) | யாவில் குளம் கிணறு புதிதாக அமைத்தல் ஆனைக்கோட்டை | 125,000 00 |
| 20) | மாசியப்பிட்டி வள்ளுவர் ச. ச. நிலைய கட்டடம் புதிதாக அமைத்தல் | 100,000 00 |
| 21) | ஐயனார் கோவில் வீதி புனரமைப்பு சண்டிலிப்பாய் | 180,000 00 |
| 22) | பொன்னாலை 1 வது ஒழுங்கை புனரமைப்பு | 150,000 00 |
| 23) | குமுதினி முன்பள்ளி பாடசாலை புனரமைப்பு சாவற்கட்டு | 25,000 00 |
| 24) | சென்ஜேம்ஸ் ச. ச. நிலையம் புதிதாக அமைத்தல் இளவாலை | 100,000 00 |
| 25) | கட்டுடை ச.ச. நிலைய முன்பள்ளி பாடசாலை கட்டடம் அமைத்தல் | 50,000 00 |
| 26) | மாசியப்பிட்டி மறுமலர்ச்சி ச. ச. நிலைய புனரமைப்பு | 100,000 00 |
| 27) | மானிப்பாய் பிரதேசசபை தளபாட கொள்வனவு | 100,000 00 |
| 28) | கலைவாணி ச. ச. நிலைய மலசலகூடத் திருத்தம் குழாய்க்கிணறு அமைத்தல் வடலியடைப்பு | 50,000 00 |
| 29) | மானிப்பாய்கிராம உபஅலுவலக மதில் அமைத்தல் | 100,000 00 |

## நான் வேலைகள்-2000
## வேலை விபரம்

| | | |
|---|---|---|
| 01) | சில்லாலை மத்திய ச.ச. நிலைய புனரமைப்பு | 75,000 00 |
| 02) | காக்கைதீவு சுடலை எரிக்கும் மேடைக் கொட்டகை அமைத்தல் | 100,000 00 |
| 03) | நவாலி சென்பீற்றர்ஸ் சவக்காலை மடம் புதிதாக அமைத்தல் | 100,000 00 |
| 04) | பெரியவிளான் சென் அன்ரனீஸ் முன்பள்ளி பாடசாலை திருத்தம் | 150,000 00 |
| 05) | திருவள்ளுவர் சேவாமன்றம் ச.ச. நிலைய புனரமைப்பும தளபாடம் வழங்கலும் ஆனைக்கோட்டை | 50,000 00 |
| 06) | சாவற்கட்டு கலையரங்கம் புனரமைப்பு | 150,000 00 |
| 07) | அன்னம்மாள் ச.ச. நிலையம் புதிதாக அமைத்தல் இளவாலை | 150,000 00 |
| 08) | நவாலி வடக்கு ச.ச. நிலைய முன்பள்ளி பாடசாலை கட்டடம் புனரமைப்பு | 50,000 00 |
| 09) | நவாலி முரசொலி ச.ச. நிலைய திறந்த வெளி அரங்கு பகுதி 111 புனரமைப்பு | 25,000 00 |
| 10) | இளவாலை பழனி ஆனந்தன் ச.ச. நிலையம் புதிதாக அமைத்தல் | 50,000 00 |
| 11) | மாதிரி கிராம முன்பள்ளி பாடசாலை கட்டட புனரமைப்பு காக்கைதீவு | 75,000 00 |
| 12) | அரசடி ச.ச. நிலைய தளபாடம் வழங்கல் பண்டத்தரிப்பு | 25,000 00 |
| 13) | மாதகல் சந்தை புதிதாக அமைத்தல் | 200,000 00 |
| 14) | இளைஞர் ச.ச. நிலைய முன்பள்ளி பாடசாலை தளபாடம் வழங்கல் மாதகல் | 40,000 00 |
| 15) | கலப்பரவி ச.ச. நிலையம் புனரமைப்பு மாரீசன் கூடல் | 25,000 00 |
| | | 50,000 00 |
| 29) | மானிப்பாய்கிராம உபஅலுவலக மதில் அமைத்தல் | 100,000 00 |
| 30) | பிரதேசசபை பொது நூலகங்களுக்கு புத்தகங்கள் கொள்வனவு செய்தல | 270,000 00 |
| 31) | நூல் நிலையங்களுக்கான தொலைக்காட்சிப் பெட்டி கொள்வனவு செய்தல் மானிப்பாய், ஆனைக்கோட்டை உப அலுவலகங்கள | 125,000 00 |
| 32) | பிரதேசசபை ச.ச. கான விளையாட்டுப் பொருட்கள் கொள்வனவு செய்தல் | 100,000 00 |
| 33) | ஜெனரேட்டர் கொள்வனவு செய்தல் | 50,000 00 |
| 34) | நகர மண்டபம் புனரமைப்பு மானிப்பாய் | 2000,000 00 |

## விசேட நிதி 400000

| | | |
|---|---|---|
| 01) | வளர்மதி. ச.ச. நிலையம், நவாலி வடக்கு தளபாடம் செய்தல் | 50,000 00 |
| 02) | முரசொலி ச.ச. நிலையம், நவாலி தெற்கு திறந்த வெளி அரங்கு | 50,000 00 |
| 03) | பிரான்பற்று சரஸ்வதி ச.ச. நிலையம் தளபாடம் செய்தல் | 50,000 00 |
| 04) | ஆலங்குழாய் பாரதி ச.ச. நிலையம், சண்டிலிப்பாய் புதிய கட்டடம் அமைத்தல் | 150,000 00 |
| 05) | திருவள்ளுவர் ச.ச. நிலையம், ஆனைக்கோட்டை குழாய்க்கிணறு அமைத்தல் | 12,000 00 |
| 6) | நவாலி வடக்கு ச.ச. நிலையம், மானிப்பாய் குழாய்க்கிணறு அமைத்தல் | 12,000 00 |
| 7) | நவாலி வடக்கு அரசாங்க மருந்தகம், புலவர் வீதி, டச்சு வீதி சந்திக்கும் இடம் ஆஸ்பத்திரி குழாய்க்கிணறு அமைத்தல் | 26,000 00 |
| 8) | வளர்மதி ச.ச. நிலையம், உச்சியோடை 2-ம் கட்ட கட்டட விஸ்தரிப்பு | 50,000 00 |

[4ஆம் பக்கம் பார்க்க]

யாழ்ப்பாணம் நாவாந்துறைப் படிப்பகம்

# ஐ. தே. கட்சி வெற்றி பெற்றால் நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்படும்

## ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றால், நாட்டின் பொருளாதாரத்தில் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சிலாபத்தில் நடைபெற்ற பொதுத்தேர்தலுக்கான பிரசாரக் கூட்டத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கட்சியின் தலைவர் தொடர்ந்து கூறுகையில் சமகாலத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் நாட்டின் கல்வித் திட்டம் அமைக்கப்படுவதுடன் பல்கலைக் கழகங்கள் அவை விரும்பிய பாடத்தை போதிப்பதற்கும் வழிவகைகள் செய்து கொடுக்கப்படும் என தெரிவித்தார்.

இதேவேளை நாட்டின் வேலைவாய்ப்புக்களைப் பூர்த்தி செய்யும் வகையில் பயிற்சி நெறிகள் ஒழுங்கு செய்யப்பட்டு பட்டங்கள் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-4)

# கொட்டும் மழையில் நனைந்தவாறு விஞ்ஞானபீட மாணவர் பகிஷ்கரிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட முதலாம் வருட மாணவர்கள் விரிவுரைகளுக்கு சமுகமளிக்காது, பகிஸ்கரிப்பு போராட்டம் ஒன்றில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட இப்பகிஷ்கரிப்பு போராட்டமானது கொட்டும் மழையிலும் தொடர்ந்தும் நடைபெற்றது.

2000/2001 கல்வி ஆண்டின் புதுமுக மாணவர்களை தம்முடன் இணைப்பதற்காக தமது ஆறுமாதகால விரிவுரைகளை இடைநிறுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இப் பகிஸ்கரிப்புப் போராட்டம் நடத்தப்படுவதாகத் தெரிய வருகிறது. (ந-4)

# அஷ்ரப்பின் குண்டு துளைக்காத கார் ஹிஸ்புல்லாவுக்கு வழங்கப்பட்டது

(கொழும்பு)

காலஞ்சென்ற அமைச்சர் அஷ்ரப் பயன்படுத்திய குண்டு துளைக்காத காரை தபால் தந்தி தொலைத் தொடர்பு பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாவுக்கு ஜனாதிபதி வழங்கியுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதியை ஹிஸ்புல்லா சந்தித்த போதே இக் குண்டு துளைக்காத காரை ஜனாதிபதி அவருக்கு வழங்கியுள்ளார். (ந)

# நெசவாளர் கூட்டுறவு சங்கம் மூடப்படும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் போதியளவு நிதிவசதி இன்மையால் அதனை இழுத்து மூடவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சங்கம் தொழில் உற்பத்தியில் தொடர்ந்து ஈடுபட முடியாதவகையில் நிதிநெருக்கடியையும் மூலப்பொருள் தட்டுப்பாட்டையும் எதிர் நோக்கியுள்ளது.

இதனால் இச் சங்கத்தில் வேலை செய்யும் 12 ஊழியர்கள் வேலையை இழக்கும் அபாயத்தை எதிர் நோக்கியுள்ளனர்.

புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் இந்திய அமைதிப்படையின் நடவடிக்கையின் போது பல கோடி ரூபாவை இழந்த நிலையில் வங்கிகள் கடன் வழங்காத நிலையிலும் தொடர்ந்து இயங்குவதில் பலசிரமங்களை எதிர் நோக்கியிருந்தன.

கடந்த வருடம் முல்லைத்தீவுக்கடலில் மூழ்கிய 'பிரின்ஸ் காஸ்' கப்பலில் எடுத்துவரப்பட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான மூலப்பொருட்களை இழந்ததும் தெரிந்ததே. (வ)

# குடும்பஸ்தர் மரணம் ஏ. ரி. எஸ். மருந்து இல்லையாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையில் அதிதீவிரசிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் மரணமாகியுள்ளார்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த எஸ். பஞ்சாட்சரம் என்பவரே மரணமானவராவார்.

ஏ.ரி.எஸ். மருந்து இல்லாததாலேயே இவர் மரணமானதாக தெரிவிக்கப்படுகிறது.

இம்மருந்துஇல்லாததனால் மேலும் ஒருவர் ஆபத்தான கட்டத்தில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-12)

# ★ கடந்த 15ஆம் திகதி இடம் பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் விடுதியில் வைத்தே திட்டமிடப்பட்டது

## பொலிஸ் அத்தியட்சகர் தகவல்

(கொழும்பு)

கொழும்பு ''கண்'' வைத்தியசாலைக்கு முன்பாக கடந்த 15ஆம் திகதி தாக்குதல் நடத்திய தற்கொலைக் குண்டுதாரி ''விடுதி'' ஒன்றிலிருந்தே தனது தாக்குதல் திட்டத்தை மேற்கொண்டிருந்தார் என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பந்துல விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

இது விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் இத்தற்கொலைக் குண்டுதாரி தற்கொலைத் தாக்குதலைமேற்கொள்வதற்கு இரவோடு இரவாக வவுனியாவிலிருந்து வந்ததாகவும், இவர் யார் மீது தாக்குதலைநடாத்துவதற்கு திட்டமிட்டிருந்தார் என்பதும் புரியாத புதிராக உள்ளது எனவும் தெரிவித்தார்.

இதேவேளை கொழும்பிலுள்ள சகல விடுதிகளும் சோதனையிடப்பட்டு விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-4)

## தப்பிச்செல்ல முயற்சி

(கொழும்பு)

பாணந்துறை விளக்கமறியலில் இருந்து தப்பிச்செல்ல முயன்ற 6 சந்தேகநபர்கள், வெலிக்கடைச்சிறைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (உ)

# இராசி பலன்

23/ 09 / 2000

(பூரட்டாதி 7, சனி)

தசமி ந ப. 12. 00 வரை

புனர் பூசம் காலை 7.05 வரை

இராகுகாலம் 9.02- 10.32

சுபநேரம் 3.02- 4.32

**மேடம்**

நண்பர்கள் நம்பிக்கையின்மை, காரியனுகூலம், வாகன சுகம்,

**இடபம்**

சகோதரர் உதவி, பண வரவு, குடும்ப சுகம் சிறு வியாதி;

**மிதுனம்**

வாக்குக் கலகம், காரியத் தாமதம், தனவிரயம்;

**கடகம்**

தெய்வசிந்தை, ஆரோக்கியம், பெரியோர் சந்திப்பு.

**சிங்கம்**

பிரயாண அலைச்சல், செய்தொழில் விருத்தியின்மை, சயன சுகக் குறைவு.

**கன்னி**

நினைத்த காரியம்கைகூடும் தனலாபம், செல்வாக்கு.

**துலாம்**

தொழில் மேன்மை, குடும்ப சுகம், நினைத்த காரியம் மந்த நிலை.

**விருச்சிகம்**

பிரயாணம், தந்தை வழி உறவு, மனப்பயம்,

**தனுசு**

உடல்வியாதி, உறவினர் வெறுப்பு, காரியம் தாமதம்.

**மகரம்**

நண்பர்கள் தொடர்பு, சுவாரஸ்யம், நிலைமாற்றம்;

**கும்பம்**

சந்தோசமான சம்பவம், தொழில் முயற்சி விருத்தி, உஷ்ண ரோகம்.

**மீனம்**

குடும்பக் கவலை, மனக் கிலேசம், சென்ற இடத்தில் செல்வாக்கு.

(பழைய நேரப்படி கணிப் பிடப்பட்டது)

வளவன்

# முன்னாள் புகையிரதப் பாதைகள் இந்நாள் குப்பை மேடுகள்

(நல்லூர்)

கடந்த காலங்களில் புகையிரதப் போக்குவரத்திற்காக பாவிக்கப்பட்ட பாதைகள் குப்பை மேடுகளாக மாறி வருவதுகுறித்துபொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சந்தர்மடம் ஆத்திசூடி வீதி, அரசடி வீதி, ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள புகையிரதப் பாதைகளே இவ்வாறு குப்பை மேடுகளாக மாறி வருகிறது;

இப்பகுதிகளில் வெளியிடங்களைச் சேர்ந்த பலரும் தமது வீட்டு குப்பை கூளங்களை கொண்டு வந்து வீசிச் செல்வதும் வழக்கமாகி வருகிறது.

மேற்படி குப்பை போடும் இடங்களுக்கருகில் ஆலயங்கள், பாடசாலை என்பன இருப்பதால் பெரும் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவி வருவதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர். (உ-103)

# உடைந்த நிலையில் திரிபோஷாமாப்பைக்கட்

(கிளிநொச்சி)

வன்னி மக்களின்பாவனைக்கென அரசாங்கத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள திரிபோஷா சத்துணவு மா பக்கட் உடைந்த நிலையில் அக்கராயன்மாகாண மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இதனால் இவற்றை கர்ப்பவதிகள், தாய்மார்கள், சிறார்கள் ஆகியோருக்கு விநியோகிப்பதில் பெரும் சிரமம் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (த)

# காணாமல் போனோர் தொடர்பான வழக்கு தாக்கல் செய்வது குறித்து தீவிர ஆலோசனை

## மனித கௌரவ மன்றம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் கடந்த 96ஆம் ஆண்டு படையினரால் கைதாகி காணாமல்போனதாகக் கருதப்படும் கணேஸ் இரமேஸ், கதிரவேற்பிள்ளை கேதீஸ்வரன், பூபாலசிங்கம். ஜெயலலிதா, இராசையா சுதர்மன் ஆகிய நபர்கள் தொடர்பாக ஆட்கொர்ணவு மனு தாக்கல்செய்வது பற்றி கலந்தாலோசிக்கப்படவுள்ளது.

மேற் குறிப்பிட்டவிடயத்திற்காக கைதடி நாவற்குழியில் வசித்து வந்த இராமாலினி, கே.மனோகரி,மறவன் புலோ மத்தியில் வசித்துவந்த பூபாலசிங்கம் சரஸ்வதி, இல 110 உப்புக்குளம் வீதி கொழும்புத்துறையில் வசித்து வந்த இ. சரோஜினிதேவி ஆகியோரை மனிதகௌரவத்திற்கான மன்ற யாழ்ப்பாண மணியம் கட்டடம் செயலகத்திற்கு உடனடியாகசமுகம்தருமாறு அதன் இணைப்பாளர் ஐ. சிவராசா அறிவித்துள்ளார். (த)

# ஈ.பி.டி.பியிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்குடாவின்தொண்டைமானாறு முதல் குடத்தனை வரையான கடற் பிரதேசத்தில் இரவு 12 மணிமுதல் காலை 10 மணிவரை சுமார் 5 கிலோ மீற்றர் தூரத்தில் மீன்பிடிக்க அனுமதிக்கும்படி வடமராட்சி கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகள் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இக்கோரிக்கையை அடுத்து கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு சம்பந்தப்பட்டபடை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி விரைவில் தீர்வு காணப்படும் என டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார், (ந-4)


"ஒன்றாய் இன்றும் நாமில்லையேல்
விடுதலை என்றும் எமக்கில்லை"

செயலதிபர், க. உமாமகேஸ்வரன்

ஒற்றுமையை வளர்த்திட அதன் சின்னமாய்
விளங்கும் எம்மை ஆதரித்திடுவீர்!



X

என்றும் உங்கள் சின்னம் நங்கூரம் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட் + ஈரோஸ்)

(1689)

## வேலைத்திட்டங்கள் -2000

[2ஆம் பக்க தொடர்ச்சி]

### பொது நிதி வேலைகள் 2000

| | | தொகை |
|---|---|---|
| 1) | நவாலி தேவாலய வீதி திருத்தம் (கிறவல்) | 33, 000 00 |
| 2) | மானிப்பாய் ஆஸ்பத்திரி தார் வீதி | 157, 000 00 |
| 3) | கட்டுடை அரசடி தார் வீதி (அன்னை வேளாங்கன்னி வீதி) | 180, 000 00 |
| 4) | மானிப்பாய் ஆனந்தா தார் வீதி பகுதி 1 | 95, 000 00 |
| 5) | மானிப்பாய்மெமோறியல் பாடசாலை தார் வீதி | 300, 000 00 |
| 6) | மானிப்பாய் சோதி வேம்படி தார் வீதி | 200, 000 00 |
| 7) | மானிப்பாய் பட்டின சபை ஒழுங்கை தார் வீதி | 140, 000 00 |
| 8) | மானிப்பாய் வடலித் தோட்டம் தார் வீதி | 99, 000 00 |
| 9) | பண்டத்தரிப்பு பாத்திமா தார் வீதி | 370, 000 00 |
| 10) | இளவாலை செல்ஜேம்ஸ் தார் வீதி | 270, 000 00 |
| 11) | பண்டத்தரிப்பு காடாப்புலம் ஆஸ்பத்திரி வீதி (தார் வீதி) | 810, 000 00 |
| 12) | மாதகல் விளான் தார் வீதி (சென் அந்தனீஸ் வீதி) | 120, 000 00 |
| 13) | மாதகல் பிள்ளையார் தார் வீதி | 190, 000 00 |
| 14) | மாசியப்பிட்டி மேற்கு தார் வீதி | 227, 000 00 |
| 15) | சுதுமலை மாப்பியன் மில் ஒழுங்கை தார் வீதி | 160, 000 00 |
| 16) | சாவற்கட்டு வைரவர் கோவில் தார் வீதி | 210, 000 00 |
| 17) | சுதுமலை விளாத்தியடி தார் வீதி | 380, 000 00 |
| 18) | ஆனைக்கோட்டை பழம் வீதி கரைப்பிரான்பற்று கோவில் தார் வீதி | 65, 000 00 |
| 19) | மானிப்பாய் விளாப்போடை தார் வீதி | 170, 000 00 |
| 20) | ஆனைக்கோட்டை அடைக்கல நாயகி தார் வீதி | 177, 000 00 |
| 21) | சண்டிலிப்பாய் முருகமூர்த்தி தார் வீதி | 39, 000 00 |
| 22) | சண்டிலிப்பாய் கிராம அபிவிருத்திச் சங்கம் தார் வீதி | 210, 000 00 |
| 23) | நவாலி சங்கயான் வீதி (கிறவல்) | 19, 000 00 |
| 24) | காக்கைதீவு குடியேற்றத்திட்ட வீதி (கிறவல்) | 35, 500 00 |
| 25) | சாந்தை குடியேற்றத்திட்ட வீதி (கிறவல்) | 51, 000 00 |
| 26) | முருங்கையப்புலம் வீதி (சவாரி வீதி)(கிறவல்) | 96, 000 00 |
| 27) | இளவாலை சகாயபுரம் உள்ளக வீதி (கிறவல்) | 16, 000 00 |
| 28) | நவாலி நாச்சிமார் கோவில் முன் ஒழுங்கை கிறவல் | 77, 000 00 |
| 29) | பாலகட்டை வீதி (சாந்தை) கிறவல் | 11, 000 00 |
| 30) | சென்பீற்றர்ஸ் ச. ச. நிலையக்கட்டடம் புதிதாக அமைத்தல் நவாலி | 420, 000 00 |
| 31) | அலுவலக தளபாடத்திருத்தம் பண்டத்தரிப்பு பட்டினம் | 15, 000 00 |
| 32) | சங்கானை மேற்கு அம்மன் வீதி திருத்தம் (கிறவல்) | 25, 000 00 |
| 33) | மானிப்பாய் கிராம உப அலுவலக தளபாடத் திருத்தம் | 18, 000 00 |
| 34) | மானிப்பாய் கிராம உப அலுவலக சட்டடம் திருத்தலும் தீந்தை அடித்தலும் | 135, 000 00 |
| 35) | ஆனைக்கோட்டை பழம் வீதியிலிருந்து ஆரம்பிக்கும் டச்சு வீதியில் (கியூப் பைப்/குழாய் வைத்துத்) திருத்தம் | 42, 000 00 |
| 36) | மானிப்பாய் பட்டின வைரவர் கோவில் தார் வீதி திருத்தம் | 180, 000 00 |
| 37) | சாவற்கட்டு குரங்கிளிப்பான் தார் வீதி புனரமைப்பு | 65, 000 00 |
| 38) | தலைமையலுவலகத்தில் சேதமடைந்த கொட்டகையை கழற்றி மானிப்பாய் கிராம நூல்நிலைய துவிச்சக்கரவண்டி கொட்டகையாக மாற்றி அமைத்தல் | 17, 000 00 |
| 39) | இடம் பெயர்ந்த பொது மக்களிற்கு ஜீவாகாரம் வழங்கப்பட்டது: | 200, 000 00 |
| 40) | புளியடிச் சந்தைக் கூரை திருத்தம் | 3, 367: 12 |
| 41) | பண்டத்தரிப்பு கிராம உப அலுவலக தளபாடத் திருத்தம் | 10, 000 00 |
| 42) | அலுவலக மேசைக்குக் கண்ணாடி போடுதல் | 2, 137. 50 |
| 43) | பண்டத்தரிப்பு கிராம நூல் நிலைய தளபாடத் திருத்தம் | 13, 000 00 |
| 44) | பண்டத்தரிப்பு ஆயுள்வேத வைத்தியசாலைப் பெயர்ப்பலகை செய்தமை | 2, 500 00 |
| 45) | பக்ஸ் மெசின் வைக்கும் கண்ணாடிப் பெட்டி செய்தல் | 4, 900 00 |
| 46) | அலுவலக உத்தியோகத்தர்களின் மேசை முன்பாக பெயர்ப்பலகை எழுதுதல் | 20, 000 00 |

### பிரமாண அடிப்படையிலான மூலதன வேலைகள் 2000

| | | |
|---|---|---|
| 1) | ஸ்ரீ அம்பாள் ச. ச. நிலைய புனரமைப்பு இளவாலை | 65. 000 00 |
| 2) | சங்கானை மேற்கு ச. ச. நிலைய முன்பள்ளி பாடசாலை மேலதிக கட்டடம் | 50, 000 00 |
| 3) | மேதர் ச. ச. நிலைய திருத்தம் சில்லாலை, பண்டத்தரிப்பு | 65, 000 00 |
| 4) | நவாலி வடக்கு ச. ச. நிலைய மலசல கூடம் அமைத்தல் | 30, 000 00 |
| 5) | மாதகல் உதயதாரகை ச. ச. நிலைய தளபாடம் வழங்கல் | 25. 000 00 |
| 6) | கட்டுடை ச. ச. நிலைய தளபாடம் வழங்கல் | 40, 000 00 |
| 7) | காந்திஜி ச. ச. நிலையத்திற்கு தையல் இயந்திரம் வழங்கல் | 30, 000 00 |

### பி. எஸ். டி. ஜி நிதி வேலைத்திட்டம் 2000

| | | |
|---|---|---|
| 1) | நவாலி தேக்கமரத்தடி தார் வீதி திருத்தம் | 300, 000 00 |
| 2) | மானிப்பாய் மேதர்ஸ் தார் வீதி திருத்தம் | 100, 000 00 |

### யுனிசெவ் நிதியால் 2000 ஆம் ஆண்டில் நடைபெற்ற வேலை விபரம்

| | | |
|---|---|---|
| 1) | காக்கைதீவு குடியேற்றத்திட்டம், முள்ளிக் கிராமம் நீர் விநியோகத்திட்டம் (அப்பகுதி மக்களின் வேண்டுகோளின் படி செய்யப்பட்டது | 500, 000 00 |

(C 812)

## ஜன்னல்கம்பிவளைத்து திருட்டு கரவெட்டியில் சம்பவம்

### நகைகள், சைக்கிள் அபேஸ்

(துன்னாலை)

30 ஆயிரம்ரூபா மெறுமதியான நகைகள், லுமாலா சைக்கிள் மற்றும் வானொலிப்பெட்டி என்பன திருட்டுப் போயுள்ள சம்பவம் கரவெட்டிமத்தியில் இடம்பெற்றுள்ளது:

ஜன்னல் கம்பியைவளைத்து திருடர்கள் உள்நுழைந்ததாகவும், அச்சமயம் வீட்டுக்காரர் அருகில்உள்ள வீடு ஒன்றிற்கு சென்றதாகவும் மேலும் அறியப்படுகிறது:

(க-41)

## பாலர் பாடசாலை அமைக்க முயற்சி

(நல்லூர்)

வண்ணை யாழ். சைவபரிபாலன சபையினர், பாலர் பாடசாலையொன்றை ஆரம்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இப்பாலர் பாடசாலையில் பாலர்களுக்குக் கல்விகற்பிப்பதற்காக, ஆசிரியைகளுக்கான விண்ணப்பத்தையும் கோரியுள்ளனர்:

பாலர் பாடசாலையில் பயில்கின்ற பாலர்களுக்கான பூங்கா, விளையாட்டிடம் என்பவற்றையும் சிறப்பான முறையில் அமைக்கச் சபையினர் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

பிரதேச ரீதியில் 'சைவப் பணி மன்றம்' அமைப்பதன் மூலம், சைவத் தொண்டுகள் புரிவதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரியவருகிறது:

(த-103)

## ஒருமாதத்திற்குள் 502 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள்

### ஆளுங்கட்சிமீதே அதிக குற்றங்கள்

(கொழும்பு)

ஒருமாதத்திற்குள் 502 தேர்தல்வன்முறைகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது:

ஆளுங்கட்சிமீதே அதிக குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது:

ஆகஸ்ட் 18ம் திகதிமுதல் செப்டெம்பர் 20ம் திகதி வரையான காலப்பகுதிக்குள் நாடுபூராகவும் நிகழ்ந்த தேர்தல்வன்முறைகளில் 271 தேர்தல்வன்முறைச் சம்பவங்கள் பொதுஜன ஐக்கியமுன்னணிமீது பதியப்பட்டுள்ளது.

இத் தேர்தல்வன்முறைகளில் 296 வன்முறைகள் பாரதூரமான வன்முறைச் சம்பவமாகவும், 105 வன்முறைச்சம்பவங்களில் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் வன்முறைக்கண்காணிப்புநிலையம் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

(செ)

## யாழ்ப்பாணத்தில் கொட்டும் மழையிலும் தேர்தல் பிரச்சாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்நகரப்பகுதியில் நேற்றையதினம் கொட்டும்மழையிலும் தமிழ்க்கட்சிகளின் தேர்தல் பிரச்சாரம் நடைபெற்றது:

கட்சிகளின் வேட்பாளர்கள் தமது கட்சிகளின் துண்டுப்பிரசுரங்களுடன் நகர்ப்பகுதியில் வாக்கு வேட்டையில் ஈடுபட்டிருந்ததை காணக்கூடியதாக இருந்தது:

க-3)

## புதிய ப.நோ.கூ.ச.கிளை

(கல்வயல்)

பச்சிலைப் பள்ளியில் இருந்து இடம் பெயர்ந்துள்ள மக்களின் நன்மை கருதி பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால், கொடிகாமம் நகரப் பகுதியில் புதிய பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிளை திறக்கப்பட்டுள்ளது:

(செ-111)




பாராளுமன்றத் தேர்தல் யாழ். மாவட்டம் 10-10-2000

தமிழினம் தலை நிமிர்ந்து நின்றிட, தந்தையின் இலட்சியம் வென்றிட,
தந்திடுவோம் எம் பொன்னான வாக்குகளை உதயசூரியனுக்கே!

தமிழர் விடுதலைக் கூட்டணி

(த-813)

## இன்று ஒரு தகவல்

# மதுவில்மயங்கினால் மதிகலங்கி நிலைதடுமாறநேரிடும்

மற்ற எல்லாக்கெட்ட உணவுப்பதார்த்தங்களையும் விடப் புகைப்பதும். மதுமுதலான போதைப்பொருட்களை அருந்துவதுமே மனிதனை சரீரரீதியில் மட்டுமன்றி அறிவுரீதியிலும் கொடுரமாகச்சிதைப்பது அதிலும் மது செய்யும் காரியங்களை சொல்லித்தீரமுடியாது.

மதுஅருந்துவது அப்படி ஒருபெரியதப்பா என்ன? அளவோடுஅருந்தினால் அது உற்சாகமூட்டுவதல்லவா? என்கிறார்கள் 'அளவோடு அருந்தினால்' என்று சொல்லிவிடலாமேதவிர அதில்சிறிது ருசிகண்டுவிட்டாலும் அப்படி நிறுத்தமுடியாது.

உற்சாகமூட்டுவதுஎன்பதும் காயத்திரி மந்திரத்தைப் போலவோ, பரந்த விரிந்த அன்புச் சிந்தனைபோலவோ நாடிநரப்புகளைத் தெரியவைத்து மனதையும், உடலையும் ஊக்குவதல்ல: அதற்கு மாறாக நரம்புமண்டலத்தைத் தற்காலிகமாகக் கிளறித்தூண்டி ஏதோஒரு சுறுசுறுப்பை வெளியேஉண்டாக்கிவிட்டு உள்ளேஅவற்றை அமுக்கி அரிப்புக்குள்ளாக்குவதே மதுசெய்யும்செயல்.

'மதுஅருந்துவது அப்படியொருபெரிய தவறாஎன்ன?' என்றெண்ணிய ஒரு பிராமணருக்கு நேர்ந்தகதியிது.

அவர்ஏதோ ஒருகுற்றம் செய்துவிட்டார்: அதற்கு தண்டனை தரவேண்டிய அரசன், 'இதுவரை' ஸத்பிரமாணராகஇருந்தவர் பாண்டித்யம் உள்ளவர் அதனால் இவருக்கு இதுதான் தண்டனையென நாம் தீர்மானிக்க வேண்டாம்.

சாஸ்திரத்தில் எந்தக்குற்றத்திற்கும் இன்னின்ன தண்டனைகளில் ஒன்றைத்தரலாம்என்று பலவற்றைக்கூறியிருக்கிறதல்லவா? அப்படி இவரது குற்றத்துக்கானவற்றை இவரிடமேசொல்லி அதிலுள்ள இவர்இஷ்டப்படியே ஏதோஒன்றைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளச் சொல்வோம், எனத் தீர்மானித்தான்.

வைதிக,பண்டிதரே! தண்டனையாகஒன்று நீங்கள் வேதத்தை நிந்தித்துப்பேச வேண்டும், அல்லது புலால் உண்ண வேண்டும். அல்லதுமது அருந்த வேண்டும் உங்கள்இஷ்டப்படி இந்த தண்டனைகளில் ஏதாவதொன்றை நீங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்'' என்றான்:

தேசத்தின் அறிவையும்ஆத்மாவையும் போஷிப்பதே கடனாகக் கொண்டிருந்த பிராமணர்களுக்கு அரசன் நேராகத்தானே சிறைவாசம், கசையடி போன்ற தண்டனைகளைத் தர விரும்பமாட்டான் சாஸ்திரத்தில் பாவகரமானது எனக் கூறப்படும் ஏதாவதொன்றைஇறைவனே தரும் தண்டனையை அனுபவிக்குமாறுதான் செய்வான் அப்படித்தான் இப்போது அரசன் பண்டிதருக்குபல சந்தர்ப்பம் கொடுத்தான்.

அரசன் சொன்ன நான்கு தண்டனைகளையும் ஆலோசித்த பண்டிதர்,''வேத நிந்தையா?

வேதியனாகப் பிறந்துவிட்டு மாத்ரு த்ரோஹத்துக்கு சமமான அதைச்செய்யமாட்டேன். புலால்உண்பதா? அகிம்சைஎன்ற பரமதர்மத்திற்கு அவதூறு செய்கின்றஇதை நினைத்துப்பாரேன் பலதார திருமணம் நினைக்கவே அருவருப்பூட்டும் மாபாதகம்அல்லவா? மதுபானம்? பேஷ்! மற்றவற்றோடுபார்த்தால் அது அவ்வளவுபெரிய தவறாஎன்ன? அதனால் அதைச்செய்கின்றேன்என்றார்.

அப்படியே மது அருந்தினார் உடனே அறிவு கலங்கி வேத மந்திரங்களைத் தாறுமாறாகஉளற ஆரம்பித்தார். ''புனிதமான வேதத்தை இப்படிச் சிதைத்துக் கூறுகிறீர்களே!'' என்றுயாரோ கேட்க மது போதையில் அறிவு குழப்பி,''வேதமாவது புனிதமாவது! எல்லாம் புளுகு முட்டை'' என்று வேதநிந்தனை செய்ய ஆரம்பித்து விட்டார்!.

ஆசாரம் வெறும் புரளி,அதற்குக் கட்டுப்படமாட்டேன்'' என்றுஆர்ப்பாட்டம் செய்து கொண்டு அரசனுடைய போஜனசாலையில் நுழைந்து கண்ணில் தெரிந்ததையெல்லாம் எடுத்து உண்ண ஆரம்பித்தார். சமையலிற்காக அவரை அடக்குவதற்காக வர,அவளிடம் தகாதவார்த்தைபேசி,தகாதமுறையில் நடந்து கொண்டார்! அதாவது அரசன்கூறிய நான்கு பாவங்களையுமே செய்துவிட்டார்.

ரா. கணபதி
அறிவு அறுபது நூல்

## சமயகலாச்சாரப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி இந்துமாணவர் மன்றத்தினர் வழமைபோல் இம்முறையும் நவராத்திரி விழாவைமுன்னிட்டு இக்கல்லூரிமாணவர்களிடையே சமயகலாச்சாரப் போட்டிகளை நடத்தவுள்ளனர்.

மேற்படிநிகழ்வில் மாலைகட்டுதல், தோரணம்பின்னுதல், கோலம்போடுதல், மனனம்செய்தல், பேச்சு, பண்ணிசை, கட்டுரை எனும் போட்டிகள் நடைபெறவுள்ளன. (த)

## விளையாட்டு போட்டி முடிவுகள்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான குழு நிலை விளையாட்டுப் போட்டியில்,

உதைபந்தாட்ட,கிரிக்கெட் போட்டியில் சென்ஜோன்ஸ் விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தையும்,

கரப்பந்தாட்டப் போட்டியில் சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தையும்,

வலைப்பந்தாட்டப் போட்டியில் பல்துறை விளையாட்டுக்கழகம் முதலாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது. (செ-82)

## மாணவர்களுக்கு உதவித்திட்டம்

(அராலி)

யாழ். மாவட்டத்திலுள்ள வறுமைக் கோட்டிற்குட்பட்ட க. பொ. த. உயர்தரமாணவர்களுக்கு அரசசார்பற்ற நிறுவனம் உதவி வழங்கும் திட்டம் ஒன்றினை செயற்படுத்தவுள்ளது.

இத்திட்டத்தில் பெற்றோர்களை இழந்து வறுமையின் மத்தியில் வாழும் இம்மாணவர்க்கு750ரூபாபெறுமதியான கல்வி உபகரணங்கள அடங்கிய பொதியினை வழங்கவுள்ளனர்.

மேற்படி திட்டத்திற்கு 2001 ஆம் ஆண்டு க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு தோற்றும் சம்பந்தப்பட்டமாணவர்கள் தமதுசுயவிபரத்தை,தமது பிரிவு கிராமசேவகரிடம் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றது. (த-24)

## புனருத்தாரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனாவைத்தியசாலையின் அவசரசிகிச்சைப் பிரிவுக்கு அண்மையில் உள்ள புனிதவேளாங்கண்ணி ஆலயம் அண்மையில் பல லட்சம் ரூபாசெலவில் புனருத்தாரணம் செய்யப்பட்டு மெருகூட்டப்பட்டுள்ளது.

இப்புனருத்காரணப்பணியை'' அமலமரித் தியாகிகள் சபை,, மேற்கொண்டது.

தற்போது இவ் ஆலயத்திற்கு கூடுதலான பக்தர்கள் வழிபாட்டில் ஈடுபடுவதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (க-12)

# நெல்லியடி பஸ் நிலையத்தில் தனியார் மினி பஸ்கள் தரிப்பதால் பொதுமக்கள் பெரும் விசனம்

(கல்வயல்)

நெல்லியடி பஸ் நிலையத்தில் தனியார் வாகனங்கள் தரித்து நிற்பதனால் போக்குவரத்துச் சபையும், பொது மக்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இப்பகுதி அதிக போக்குவரத்து நெரிசல்களையுடையது.

ஆனால் மேற்படி வாகனங்கள் தரித்து நிற்பதனால் மற்றைய பஸ் வண்டிகளில் பயணம் செய்பவர்கள் உள் ஏறவோ அல்லது வெளியில் இறங்கவோ முடியாமலும், பாதைகளில் நடந்து செல்ல முடியாமலும் அவலப்படுகிறார்கள்.

இந்நிலை நீடிக்கப்படுமானால் அதிக விபத்துகள் ஏற்படவும் வாய்ப்புண்டு. எனத் தெரிவிக்கப்படுகிறது.(த-11)

# யாழ்ப்பாணத்தில் 20 வருடங்களின் பின் சனத்தொகை மதிப்பீடு முயற்சி

(வட்டுக்கோட்டை)

யாழ். மாவட்டத்தின்2001 ஆம் ஆண்டுக்கான சனத்தொகையினை மதிப்பிடு செய்யும்ஆரம்பநடவடிக்கைப் பணியில்யாழ்.புள்ளிவிபரத்திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

இதற்கான முதல் கட்ட நடவடிக்கையாக வலி.மேற்கு பிரதேச செயலகத்தில், கிராம அலுவலர்களுக்கான பயிற்சிவகுப் பொன்றினை மேற்படிதிணைக்களம் கடந்த புதன்கிழமை நடத்தியுள்ளது.

தொடர்ந்தும் ஏனைய பிரதேச செயலககிராம அலுவலர்களிற்கும் இவ்வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

கடந்த 20 வருடங்கள் நாட்டின் சீரின்மைகாரணமாக வடக்கு- கிழக்கு பகுதிகளில் மேற்படி நடவடிக்கைகள் நடைபெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-24)

# மனைப் பொருளியல் பயிற்சி நெறி ஒக்டோபர் முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி நிலையம் செயற்படுத்திவரும் மகளிர் சுயவேலை வாய்ப்புதிட்டத்தின் கீழ் நடைபெறும் மனைப்பொருளியல் பயிற்சி நெறி ஒக்டோபர் 1 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இப் பயிற்சி நெறி உயர்கல்வியைத் தொடர முடியாத பெண்களுக்கு பெரும் வாய்ப்பாகவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை இத்திட்டத்தில் 15 பயிற்சி நெறிகளில் 840 மாணவிகள் பயனடைந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப் பயிற்சி நெறியை பூர்த்தி செய்த பின்னர் வழங்கப்படும் சான்றிதழ்களிற்கு உள் நாட்டிலும்,வெளிநாட்டிலும் தகுந்த மதிப்பு உண்டு என்றும் தெரிவிக்கப்படுகிறது. (த)

# தென்மராட்சியிலிருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கு 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு

(மானிப்பாய்)

வலி. தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்து தங்கியுள்ள குடும்பங்களுக்கான 2000 ரூபா கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

மேற்படி கொடுப்பனவுகள் நாளை மறுதினம் 25 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் இம் மாதம் 28 ஆம் திகதி வியாழக்கிழமை வரை வழங்கப்படும்.

இவற்றை சங்கானை மக்கள் வங்கிக் கிளையில் பெற்றுக் கொள்ளும்படி சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினர் அறிவித்துள்ளனர்.

இதன் பிரகாரம் 25 ஆம் திகதி திங்கள் ஜே-129 கிராம சேவையாளர் பிரிவிற்கும், 26 ஆம் திகதி செவ்வாய் கிழமை ஜே-143, 147, 139, கிராம சேவையாளர் பிரிவிற்கும், 27 ஆம் திகதி புதன் ஜே-140 கிராம சேவையாளர் பிரிவிற்கும், 28 ஆம்திகதி ஜே-145,148, இராமசேவையாளர் பிரிவிற்கும், இக்கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

இக்கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு விண்ணப்பித்தவர்கள் தமது பிரிவு கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு கொடுப்பனவை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (த-120)

## மெய்வல்லுனர் போட்டிகள்

நெடுந்தீவு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்டபதிவு செய்யப்பட்ட மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிகள் நெடுந்தீவு மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இன்றும் நாளையும் காலை 9.00 மணி தொடக்கம் நடைபெறும் மேற்படி நிகழ்வு நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ஜெ. எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் நடைபெறும். (த-110)

## புதிய தண்ணீர்த் தாங்கி அமைப்பு

(கல்வயல்)

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்திற்கு கொடிகாமம் வணிகர் மன்றத்தினால் புதியதண்ணீர்த் தாங்கி ஒன்று அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

இதனால் இப்பாடசாலை மாணவரின் தண்ணீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளது. (செ 111)

## வீதி திருத்தம்

(நல்லூர்)

நாவலர் வீதி,பிறவுண் வீதி பலாலி வீதி, ஆகியவற்றின் பிரதான ஒழுங்கையாகவிளங்கும் அன்னசத்திர ஒழுங்கை நீண்ட காலமாகத் திருத்தப்படவில்லை.

ஆயினும் தற்போது இவ் ஒழுங்கை திருத்தம் மேற்கொள்ளப்படுவதற்கான முன் நடவடிக்கையாக வீதியின் இருமருங்கிலும் கற்கள் பறிக்கப்பட்டு உள்ளன. [த-103)


# சுயேச்சை குழு இல-3

திரு. வேல்முருகு தங்கராசா தலைமையில்
(ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவுடன்)

பல்லின மக்கள் நாம் பகைமையை மறந்து
போரினை நிறுத்தி போக்குவரத்துப் பாதை திறந்து
தமிழர் தாயகமாய் வடக்கு-கிழக்கு இணைந்து
சந்திரிக்கா தலைமையில் சமாதானம் கண்டிட
எமது வாக்கைத் தொலைபேசிக்கே அளித்திடுவோம்



## வியட்நாம், கம்போடியாவில் தொடர்மழை; 150 பேர் பலி

(ஹனோய்)

வியட்நாம், கம்போடியா பகுதிகளில் இடைவிடாது பெய்த கடும் மழை அனர்த்தத்தினால் 150 பேர் வெள்ளத்திற்கு பலியாகியுள்ளனர்.

மேற்படி சம்பவத்தினால் 2 லட்சத்து 60 ஆயிரம் குடும்பங்கள் தமது வீடுகளை இழந்துள்ளனர்.

பல வீடுகள் இடிந்து தரைமட்டம் ஆகியுள்ளன. இந்நாடுகளின் வீதிகளிலும் கிராமங்களிலும் பரவலாக வெள்ளம் தேங்கி நிற்கிறது.

வெள்ளம் உயர்ந்திருப்பதால் இரு சக்கர தள்ளு வண்டிகளில் பெண்களையும், குழந்தைகளையும் ஏற்றியபடி மீட்பாளர்களும், ஆண்களும், தொண்டர் நிறுவனங்களும் பாதுகாப்பான இடங்களை தேடி இடம் பெயருகின்றனர்.

இப்பகுதிகளில் தொடர்ந்தும் மழை பெய்வதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக செய்தி தொடர்பு சாதனங்கள் தெரிவித்துள்ளன. (து)

## பீகாரைவிட மோசமான ஆட்சி மேற்கு வங்கத்தில் நிலவுகிறது

### பாதுகாப்புதுறை அமைச்சர் தெரிவிப்பு

(புதுடில்லி)

பீஹார் மாநில ஆட்சியைவிட மேற்கு வங்காளத்தின் ஆட்சி மிக மோசமான நிலையில் உள்ளது என்று குறிப்பிட்டேனே தவிர மாநிலத்தில் ஆளுநர் ஆட்சி வரவேண்டும் என்று நான்கூறவில்லை என்று பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தெரிவித்தார்.

மேற்கு வங்க முதலமைச்சர் ஜோதிபாசு பாதுகாப்பு அமைச்சர் தவறான கண்ணோட்டத்தில் ஆளுநர் ஆட்சி பற்றிப் பேசியதாக கூறினார் என்றதற்கு மறுப்புத் தெரிவிக்கும்முகமாகவே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேற்கு வங்க மாநிலம் பீஹார்மாநிலத்துடன் சட்டசபைவிடயத்திலும் நீதி நிர்வாக விடயத்திலும் ஊழல்கள் விடயத்திலும்ஒப்பீட்டு முறையிலும்பார்க்கும் போதுதான் கூடுதலாகத் தெரிகிறதென்றும் தெரிவித்திருந்தார்.

ஆனால் ஆளுநர் ஆட்சி நடத்தஜனாதிபதிக்குசிபார்சு செய்வது எனது வேலையல்ல என்று தெரிவித்தார். (து)

## மின்சாரம் தாக்கியதில் பஸ் பயணிகள் 15 பேர் பலி

(சென்னை)

பீஹார் மாநிலத்தில் வைசாரி மாவட்டத்தில் தனியார் பஸ் மீது மின்சார வயர் அறுந்து வீழ்ந்ததில் 15 பேர் கொல்லப்பட்டனர்.

பெருந்தொகையான பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்ற பஸ் ஒன்றின் மேல் வலுவான மின்சார வயர் அறுந்து வீழ்ந்ததில் மேற்குறித்த தொகையினர் பலியாகினர்.

நேற்றுக் காலை நடைபெற்ற இவ்விபத்து ஆக்கிப்பூரில் நடைபெற்றதாகவும் கூடுதலாக பயணிகளை ஏற்றிச் சென்றதால் நடந்திருக்குமெனவும் இந்த விபத்தினை உறுதிப்படுத்திய உயர் அதிகாரிகள் எத்தனை பேர் இந்த மின்சாரத் தாக்குதலால் இறந்தார்களென்பதை உறுதியாகச் சொல்ல முடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து)

உலக தரிசன அறிவுப் போட்டி இல: 02

முழுப் பெயர் :-..............................................

முகவரி :-..............................................

..............................................

பிறந்த திகதி :-..............................................

போட்டியாளர் கையொப்பம் ..............................

பெற்ற புள்ளிகள்

10-9-2000ஆம் திகதி வெளிவந்த உலக தரிசன போட்டி வினாக்களுக்குரிய விடையுடன் இப் பத்திரத்தை அனுப்பவும். முடிவு திகதி 25-9-2000.

கன்னட நடிகர் ராஜ்குமார்

## விடுவிக்கப்படாவிட்டால் போராட்டம் ஆரம்பிக்கப்படும்

### இளைய மகன் அறைகூவல்

(பெங்களூர்)

சந்தன மரக்கடத்தல் வீரப்பனால் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் கன்னட நடிகரை விடுதலை செய்யாவிட்டால் தாம் உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அவரது இளைய மகன் தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் சந்தன மரக்கடத்தல் வீரப்பனால் விடுவிக்கக் கோரப்பட்ட ஐந்து சிறைக்கைதிகளையும் விடுவிக்கக்கோரி தொடுக்கப்பட்ட வழக்கில் தமிழக அரசு கர்நாடகஅரசுமீது குற்றஞ் சாட்டியுள்ளது.

ஒருவருடத்துக்கு முன் நடிகர் ராஜ்குமார் கடத்தப்பட இருக்கிறார் என்று கர்நாடக அரசுக்கு அறிவிக்கப்பட்டது என்றும் ராஜ்குமார் தமிழ்நாட்டு எல்லைக்குள் வந்ததை தங்களுக்கு அறிவித்திருந்தால் தாம் நடிகருக்குப் பாதுகாப்புக் கொடுத்திருக்க முடியுமென்றும் தமிழ்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் வீரப்பனைச்சந்திக்க கோபால் அரச தூதுவராகக் காட்டுக்குச் சென்று விட்டாரென்றும் தெரிவிக்கப்படுகிறது.

கன்னட நடிகர் சங்கம் ராஜ்குமாரை விடுவிக்கும்படி வீரப்பனுக்கு கடிதம் கோபாவிடம் கொடுத்து விட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் அவசரமாக கர்நாடக முதலமைச்சர் கிருஷ்ணா புதுடில்லிக்கு விரைந்துள்ளதாக செய்திகள் தெரிவித்துள்ளன.

கர்நாடகாவில் ராஜ்குமாரை விடுதலை செய்யக்கோரி அவரின் மூன்று புதல்விகள் தலைமையில் ஊர்வலங்களும் கதவடைப்புகளும் இடம்பெற்று வருவதும்இங்கு குறிப்பிடத்தக்கது. (து)

## லண்டனில் ஏவுகணைத் தாக்குதல் உளவுத்துறை தலைமையகம்சேதம்

(லண்டன்)

லண்டனிலுள்ள உளவுத்துறைத்தலைமையகம் ஏவுகணையால் தாக்கப்பட்டதாக பிரித்தானிய பொலிஸார் அறிவித்துள்ளனர்.

சிறியரக ஏவுகணையால் தாக்கப்பட்ட இந்ததலைமையகம் பலத்த சேதத்துக்குளாகவில்லையென்றும் உயிர்ச்சேதங்கள் எதுவும் ஏற்படவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இந்த ஏவுகணை தாக்குதல் குறித்த விசாரணைகள் இடம் பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்தில் ஆயுதம் தாங்கிய ஐரிஷ் குழு சம்பந்தப்பட்டிருக்கலாமென்று ஊகங்கள் வெளியிடப்பட்டுள்ளன. [து]

பங்களாதேஷில்

## இராணுவம் ஆட்சி அமைப்பதானது நாட்டை பின்தள்ளும் முயற்சியே

### பிரதம மந்திரி ஷேக்ஹஸீனா தெரிவிப்பு

(டாக்கா)

இராணுவம் பங்களாதேஷில் மீண்டும் ஆட்சி அமைக்க முற்படுவது நாட்டைப்படு குழிக்குள் தள்ளிவிடும் என்று அந்நாட்டுபிரதம மந்திரி ஷேக்ஹஸீனா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; இராணுவ ஆட்சி ஊழல் மலிந்ததென்றும் நாட்டு மக்களை தவறானவழிகளுக்கு இட்டுச் சென்று விடுமென்றும் ஜனநாயகம் செத்துவிடும் என்றும் பங்களாதேஷ் வானொலியொன்றுக்கு மக்கள் நேருக்கு நேர் கேட்கும் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

1975 ஆம் ஆண்டு நடந்த திடீர் இராணுவப் புரட்சியின் போது தனது தந்தை கொல்லப்பட்டதை நினைவுபடுத்திய ஷேக்ஹஸீனா அதன் பின் சிறிதுகாலம் நாடு அதலபாதாளம் நோக்கி சென்றிருந்ததையும் எடுத்துக் கூறினார்.

இப்பொழுது பங்களாதேஷில் ஜனநாயகம் வேர்விட்டு வளர்ந்திருப்பதையும் எடுத்துக் கூறினார். (து)

## கொலைச்சந்தேகநபர் கைது

(லண்டன்)

இங்கிலாந்து ஜோர்ச் சிமாட்டி சாராபெப்சனின் முன்னாள் செயலாளர் ஜோன் அன்ரூஸ் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஜோர்ச் சீமாட்டியின் முன்னாள் காதலரின் கொலை தொடர்பான சந்தேகத்தின் பேரில் இவர் கைது செய்யப்பட்டிருப்பதாக தெரியவந்துள்ளது.

கடந்த ஞாயிறன்று ஜோர்ச் சிமாட்டியின் முன்னாள் காதலரின் சடலம் அவரது படுக்கையறையில் கொலை செய்யப்பட்ட நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

அதுமுதல் நகைக்கடை ஒன்றில் தொழில் புரிந்துவந்த அன்ரூஸ் தலைமறைவாகி வாழ்ந்து வந்த நிலையில் பிரிட்டன் பொலிஸார் இங்கிலாந்தின் ஒதுக்குப்புற நகர் ஒன்றில் வைத்து அவரை கைது செய்துள்ளனர். (உ)

உலக தரிசனம்




மானிட விடியலுக்காகவும்
மகத்தான சமாதானத்திற்காகவும்
வாக்களிப்போம்!

தமிழரின் விடிவுக்கு வரதரின் சின்னம்



சுபத்திரன் (றொபேட்)

03

சுயேச்சைக்குழு - 2 X

அ. வரதராஜப் பெருமாள்

01

(ஈ. பி. ஆர். எல்.எ.ப்)

[1744]

'சொல்லுக சொல்லின் பயனுடைய சொல்லற்க சொல்லில் பயனிலாச் சொல்'

- குறள் -

# வலம்புரி

## மாயமான்ஆனார்

எங்கள் சுதந்திரம் படுகின்ற பாடும். பிரதமர் ஐயா இன்னும் ஐந்து வருடம் காத்திருக்கச் சொல்கிறார். அப்போதான் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியுமாம் இடைத்தரகர்கள் என்னென்னவோ சொல்லிக்கொண்டு சுகத்தின் சொகுசினை அனுபவிக்கத் தெண்டிக்கிறார். காலத்தின் கோலம் பொய்யுரைகளை அவ்வப்போது கேட்டு ஏமாந்து போக வேண்டியிருக்கு.

தமிழன் எப்போ ஒன்றாய் நிற்பான் பல்லைக் குற்றி மூக்கிலேபிடிக்காது நடந்தவற்றைக் கடந்தவைகளாக வைத்து கை கோர்த்து வீறு நடை போடுவானோ அன்றைக்கு அனர்த்தங்கள் மறையும், அவலங்கள் போகும், ஆனந்தம் மிளிரும் என்பது உள்ளத்துப் பிரேமை.

பொதி சுமந்த புண்ணியர்களாய் அங்கும் இங்கும் அலையும் மக்களின் அவல வாழ்வு முதலில் மறைய வேண்டும். செல்லும் வேகத்தைச் சீர் குலைக் காது பார்த்துக் கொள்ள வேண்டும். ஈனுஇற மாட்டை நக்கின மாடு கெடுத்தது போன்ற அவலம் சுதந்திர வேட்கைக்கு ஆகி விடக் கூடாது. சாண் ஏற முழம் சறுக்கினது போல எங்கள் இலக்குத் தவறிப் போகக் கூடாது.

பேரினவாதப் புயல் வெகுண்டெழுந்து நம்மைச் சின்னாபின்னப் படுத்தும் காலம்மிகநீண்டு கொண்டு போகிறது. பாம்புக்குப் பாலை வார்த்து வளர்த்தாலும் அதன் தன்மை மாறாது. புதிய

# விஷ்ணு ஆலயங்களில் நோற்கப்படும்

# சனி விரதத்தின் மகத்துவம்

இன்று புரட்டாதி மாத முதல் சனிக்கிழமை விரதம் அனுஷ்டிக்கும் நாள். இச்சனி விரதமானது ஆன்மாவில் படிந்துள்ள பல மாயைகளை விலக்குவதற்காக அனுஷ்டிப்பது என்று கூறும் போதும் அது பற்றிய பல ஐதீக கதைகளும் தத்துவங்களும் உண்டு.

8வது சனியில் தான் இலங்கை அரசன் இராவணன் உயிர் நீத்தான்.

2வது சனி சுக்கிரன் குருடானான். ஜென்மத்தில் உள்ள சனியால் சூர்ப்பனகை மூக்கறுக்கப்பட்டாள். நளன்-அரிச்சந்திரன் காடேகினர்.

விஷ்ணு சனிக்கு அதிபதி விஷ்ணு ஆலயங்களில் புரட்டாதிச் சனி சிறப்பாக அனுஷ்டிக்கப்படுவது. சனி சிவபக்தருமாவார். யாழ்ப்பாணம் பெருமாள் கோவில், கீரிமலை நகுலேஸ்வரர் தேவஸ்தானம் பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயில் இன்னும் பல தலங்களில் சிறப்பாக புரட்டாதிச் சனி கொண்டாடப்படும். நவக்கிரக தேவர்கள் சிவாலயங்களில் இருப்பதால் அங்கும் சென்று வழிபட்டால் சனி தோஷம் சாத்தியமாகும்.

### ஜாதகத்தில் சனி

சனிக்கு இயற்கையாகச் சாந்தகுணம் தான் அமைந்தது. விசுவகர்மாவின் மகளை மணந்து அவளோடு வாழ்வின்பம் நுகராது அவருக்குச் சந்ததி தோன்றாது செய்த காரணத்தால் அந்த கற்புக்கரசி ''உமது பார்வை படுமிடமெல்லாம் கருகிப் போவதாக'' என்று சபித்தார். சிவபூசையில் பயனைக் கருதியாவது சாப நீக்கம் வேண்டுமென்று மன்றாடினார் சனி பகவான்;

''நீர் அமையும் தானத்தைப் பொறுத்து அது கூடவும் குறையவும் கூடும்'' என்று வாக்கருளினார். அந்த அம்மை சனிபகவான் அமையும் இடத்தைப் பொறுத்து மனிதர்களுக்குப் பலன்கள் அமைகின்றன. பலனின் பலமும் சனி இருக்கும் ஸ்தானத்தைப் பொறுத்ததே!

''இலங்கை
இராவணனுக்கு
கெட்டிலே சனி
ராமனாலுயிர்
மாண்டனன்
நாணிகந்தனில் சுக்கிரன்
குருடனானதுஞ்
சனிரெண்டிலே பாவி
சூர்ப்பனகை
மூக்கறுந்ததும் பகரருஞ்
சனி ஜெனனமாம்''

என்றொரு பழைய பாடல் கூறுகின்றது.

பஞ்சவர்கள் குதினாற்
பதியிழந்து
பஞ்சுபடும் பாடவர்கள்
படசெய்வித்தாய்
எந்சவினாவரிச்சந்திரன்
வெண்டை விற்றே
இழிகுலத்திலடிமையுற
விசைய வைத்தாய்
தஞ்சமென்றே யுனைப்
பணிந்தன்என்னைத்
தொடாதே
சனியனே காகமேறுந்
தம்பிரானே!''

இப்பாடல்களால் சனிபகவானின் தொழில்கள் நன்கு புலப்படுகின்றன.

### கனகசபாபதி நாகேஸ்வரன்

'ஆகப்பட்டவனுக்கு அட்டமத்திற் சனி, ஓடிப்போனவனுக்கு ஒன்பதில குரு' என்றபடி இராவணன் போர்முனையில் தனது வீரமுங்களத்தே போட்டு ஒழியும் நிலைமையில் அட்டமச் சனி வந்ததையும், சனி பகவான் வலிமையிலே கிரகங்களுக்கெல்லாம் மேலே இருக்கிறார். 12 இராசிகளையும் ஒரு முறை வலம் வர 30 வருடங்கள் செல்லும். இதனாலேயே ''முப்பது வருடம் வாழ்ந்தவனுமில்லை. முப்பது வருடம் கெட்டவனுமில்லை'' எனும் பழமொழியும் வழங்குகின்றது.

### சனி பார்வை தீமை

சனிபகவானுடைய தொடர்பினால் துன்புறாதவர்கள் இல்லையெனலாம். நளன், அரிச்சந்திரன் முதலான மன்னர்கள் நாடு நீங்கிக் காடடைந்து அனுபவித்த இன்னல்களே சான்று.

''மஞ்சுதவ மயோத்தியின்
வாழ் தசரதன்றன்
மக்களையும் வனவாசமாக்கி
வைத்தாய்

துஷணைப் பற்றானன்

சனி பகவான் தொடர்புள்ளவர்களது வாக்கால் அமங்கலச்சொற்களே அதிகம் வரும். மங்கல வாக்குகள் வருவது அரிதினுமரிது.

சனி பீடைகளுக்குப் பரிகாரமாகச் செய்யத்தக்கன, ''சனி நீராடு'' என்பதன் படி சனி வாரத்தில் எண்ணெய் தேய்த்து நீராடுவோருக்கு ஆயுள், ஆரோக்கியம்என்பன உண்டாம.

### பயனை வெல்லும் சனி

எள் கலந்த உணவை உட்கொள்ளல்நலம். எள்விளக்கேற்றாலே செல்வம் பெருகும் பிறருக்கு எள் தானம் புரிதல் நன்று. சனி வாரங்களில் காலையிற் கருடதரிசனம், ஆஞ்சநேயர் தரிசனம்செய்தல் நன்று. இந்நாளிற் கடன் வாங்குதல், கந்தை உடுத்தல் கூடாது. காகத்திற்கு உணவிடும் போது எள்ளும், வெல்லமும் கலந்து ஆலிலையில் இடுதல் வேண்டும். இவ்வாறு செய்து வருவோர்க்குச் சனி பீடை தொலைந்து நலமுண்டாகும்;

## சனீஸ்வரன் தோத்திரம்

இன்று புரட்டாதி மாத சனீஸ்வர விரத ஆரம்ப தினத்தையொட்டி இத்தோத்திரம் பிரசுரமாகின்றது

தேவரெண் டிசைக்கதிபர் சித்தரொடு இம்புதடர்
மூவர் முனிவர் முதலோரை - மேவியுறுந்
தாரணிந்த மார்பன் சனிபகவான் கதைபுகலக்
காரணிந்த யானை முகன் காப்பு

ஆதிவேதாந்த முத லரிய ஞானம்
ஐந் தெழுத்தி னுட்பொருளை அயன் மாலோடும்
சோதிசிற்றம் பலத்திலாடி நின்ற
கடரொளியை நீ பிடித்த தோஷத்தாலே

பாதிமதி சடைக்கணிய அரவம் பூணப்
பதியிழக்கச் சுடலைதனித் தாடியாடச்
சாதியில்லா வேடனெச்சிற் றின்ன வைத்தாய்
சனியனே காகமேறுந் தம்பிரானே

## இடம்பெயர்ந்தோர் வதியும் இடங்களில் வாக்குச் சாவடிகள்

(யாழ்ப்பாணம்)

பளை, சாவகச்சேரி, கிளிநொச்சிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த வாக்காளர்களுக்கு அவர்கள் கூடுதலாக வாழும் இடத்தை அடிப்படையாகக் கொண்டு வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம், உடுப்பிட்டி, மானிப்பாய் வட்டுக்கோட்டை, நெல்லியடி, நல்லூர், கோப்பாய் போன்ற

தேர்தல் ஆணையாளர் எஸ். நடராசா தெரிவித்துள்ளார்.

(க-3, 12)

## முன்பள்ளி ஆசிரியர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி. கிழக்குமுன்பள்ளி ஆசிரியர்களுக்கான கூட்டம் நாளை மறுதினம் 25 ஆம்

## 'சீதனவீடு'' நூல் வெளியீடு

(புலோலி)

சட்டத்தரணி சபா இரவீந்திரனின் ''சீதன வீடு'' சட்ட நூல்வெளியீட்டுவிழா நாளை தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய மண்டபத்தில் மல்லாகம் மாவட்ட நீதிபதி பா. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மாவட்ட நீதிபதி எஸ். ஏ. ஈ. ஏகநாதன் பிரதம விருந்தினராகவும், யாழ். பல்கலைக்கழக வணி

## மதில்கள்நிறுவும் பணி ஆரம்பம

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் தொழிநுட்பக் கல்லூரியில் எல்லை மதில்கள் நிறுவும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

95-ம் ஆண்டு யாழ்.குடாநாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையையடுத்து மேற்படி கல்லூரி சேதத்திற்குள்ளா

புக்குப் பாலை வார்த்து வளர்த்தாலும் அதன் தன்மை மாறாது. புதிய முகங்கள் ஆட்சிக் கதிரையில் வரும் போதெல்லாம் தமிழன் நெஞ்சம் எதிர்பார்ப்புடன் அங்கலாய்ப்பதுண்டு. ஆனால் முன்னையவரிலும் மும்மடங்கு துவேசம் கக்கும் எரிமலை போல ஆகுவது தான் பரிதாபத்துக்குரியது. இது தான் வழமையுமாகி விட்டது.

அரசியல் ஸ்திரம் வேண்டுமென்கின்ற தமிழன் நவக்கிரகங்கள் போல பல கோணங்களையும் பார்ப்பதேன் எல்லோரும் இந்த மண்ணின் விடிவிற்குத் தியாகம் செய்தவர்களே பொது மகன் கூட ஒருவகையில் தியாகம் செய்தவனே. நிலைமை அவ்வாறிருக்க வேற்றுமைகளைக் களைந்தெறிந்தால்மட்டுமே தமிழனுக்கு விடிவுஉண்டு.

அன்புடன் ஆசிரியர்

யாழ்ப்பாணம், உடுப்பிட்டி, மானிப்பாய் வட்டுக்கோட்டை, நெல்லியடி, நல்லூர், கோப்பாய் போன்ற இடங்களிலேயேமாற்றுவாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட விருப்பதாகவும் தேர்தல் ஆணையாளரிடமிருந்து இதற்கான அனுமதி கிடைத்ததும் இது பற்றிய முழு விபரம் அறிவிக்கப்படுமென உதவி

## நாளை பிரிவுபசாரவிழா

(வட்டுக்கோட்டை)

வலிமேற்கு முன்னாள் பிரதேச செயலரான கா. சந்திரராசாவின் பிரிவுபசார விழா நாளை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

மேற்படி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் ந. வேதநாயகன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர். க. சண்முகநாதன், சிறப்புவிருந்தினர்களாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம், யாழ். மாவட்ட திட்டப்பணிப்பாளர் செ. மகாலிங்கம், ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (த-24)

(யாழ்ப்பாணம்)

வலி: கிழக்குமுன்பள்ளி ஆசிரியர்களுக்கான கூட்டம் நாளை மறுதினம் 25 ஆம் திகதி திங்கட்கிழமை பி. ப 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

உரும்பிராய் பிரதேசசபை உபஅலுவலக மண்டபத்தில் சங்கத் தலைவர் ஞானேஸ்வரி கதிர்காமநாதன் தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெறும்.

இக்கூட்டத்தில் அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களை கலந்து கொள்ளுமாறு சங்கத் தலைவி அறிவித்துள்ளார். (த)

## கூட்டுறவுச் சங்கத்தில் பன்முகசேவை

(கல்வயல்)

கட்டைவேலி நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பஸ் நிலையத்திற்கு அருகாமையில் பருத்தித்துறை வீதியில் தனது பன்முகப்படுத்தப்பட்ட சேவை நிலையம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இச் சேவையில் தொலைத்தொடர்பு, பக்ஸ், நிழற்படப்பிரதி, தட்டச்சு, றோணியோ என்பன குறைந்த கட்டணச் செலவில் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-111)

இந்நிகழ்வில் மாவட்ட நீதிபதி எஸ். ஏ. ஈ. ஏகநாதன் பிரதம விருந்தினராகவும், யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவப் பீடாதிபதி நடராஜசுந்தரம் சிறப்புவிருந்தினராகவும் கலந்து கொள்வர்.

நூல் வெளியீட்டுரையை இந்து மகளிர் கல்லூரி அதிபர் செல்வி ஏ. கனகரத்தினமும், ஆய்வுரையைச் சட்டத்தரணி எஸ். இவநேசனும் நிகழ்த்துவார்கள். (ந-52)

## வறிய மாணவர்களுக்கு உதவி

(நல்லூர்)

'வறுமைக் கோட்டின் கீழ், வசதி குறைந்த நிலையில் வாழ்கின்ற மாணவர்களுக்குக் கல்வித் துறையிற் பல வகைகளிலும் உதவுமுகமாக, கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கம் ஒன்றரை லட்சம் ரூபா பணத்தை வங்கியிலிட்டுள்ளது.

இந்த நிதியின் வட்டியைப் பெற்று அதன் மூலம் வசதியற்ற மாணவர்களுக்கு உதவுவுள்ளதாக, பழைய மாணவர் சங்கச் செயலாளர் திருமதி. பேரின்பராணி இரத்தினசிங்கம் தெரிவித்துள்ளார். (த-103)

நாட்டில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையையடுத்து மேற்படி கல்லூரி சேதத்திற்குள்ளாகியதுடன் சூழவுள்ள பகுதியில் மிதிவெடிகளை பல புதைக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

தற்சமயம் மிதிவெடிகள் இப்பகுதியிலிருந்து அப்புறம்படுத்தப்பட்டுள்ளதால் மேற்படி மதில்சுவர்கள் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (க-2)


## வீடியோப் படக் காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்புகள் அலகும், திரைப் படவட்டமும் இணைந்து வழங்கும் திரைப் படக் காட்சித் தொடரில் ஸ்ரீவன் ஸ்பீல்பேர்க், இன் ஷின்டலர்ஸ்லிஸ்ட்'' எனும் திரைப்படம் இன்று காண்பிக்கப்படும்.

இன்று காலை 10 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் திரையிடப்படும்இவ் வீடியோ காட்சியில் ஆர்வலர் அனைவரும் கலந்து கொள்ளலாமென பல்கலைக் கழக புற நிலைப் படிப்பின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (த)

## 27 ஆவது ஒலிம்பிக் போட்டி



## 400மீ. தகுதிகாண் ஓட்டத்தில் இலங்கைக்கு 3-வது இடம்

சிட்னி 'கோம் போஸ்பே' மைதானத்தில் நேற்று நடைபெற்ற பெண்களுக்கான 400மீற்றர் தகுதிகாண் ஓட்டப் போட்டியில் இலங்கையைச் சேர்ந்த தமயந்தி தர்ஷா மூன்றாம் இடத்தினைப் பெற்றுள்ளார்.

★ ★ ★

இலங்கையின்குறுந்தூரஓட்டவீராங்கனை 'சுசந்திகா ஜெயசிங்க' 100 மீற்றர் அரையிறுதிப் போட்டியில் கலந்து கொள்வதற்கு தகுதி பெற்றுள்ளார்.

★ ★ ★

ஒலிம்பிக் போட்டியின் 7 ஆவது நாளான நேற்று வரை அமெரிக்கா16 தங்கம் உட்பட 38 பதக்கங்களைப் பெற்று தொடர்ந்தும் முன்னணி வகிக்கிறது. (ந-4)

# நிராயுத பாணிகளுக்கு பாதுகாப்புத்தர வேண்டும்

## தேர்தல் ஆணையாளரிடம்கோரிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் ஒரு சில கட்சிகளிடம் ஆயுதம் இருப்பதினால் நிராயுத பாணிகளாக தாங்கள் தேர்தல் பிரசாரம் செய்ய முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் பிரசாரம் தொடர்பாக தேர்தல் ஆணையாளரைச் சந்தித்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்கட்சி செயலாளர் என்.குமரகுருபரன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணையாளருடனான இச் சந்திப்பின் போது ஏனைய தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணத்தில் மற்றும் தீவுப்பகுதியில் தடங்கல்கள் எதுவுமின்றி தேர்தல் பிரசாரம் செய்யவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந் நிலையில் வேட்பாளர்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்க வேண்டும் எனவும் தேர்தல் ஆணையாளரிடம் கேட்டுள்ளார். (வ)

## போசாக்கு கல்வி நிகழ்ச்சித் திட்டம்

[வட்டுக்கோட்டை]

வலிமேற்கு பிரதேச செயலகம் இப் பிரதேசத்திலுள்ள மாணவர்களிற்கு போசாக்கு கல்வி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினை நடத்தியுள்ளது.

அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற மேற்படி நிகழ்விற்கு பாராளுமன்றத்துறை அலுவல்கள் அமைச்சின்திட்டசெயற்பாட்டுத்துறை] அனுசரணைவழங்கியுள்ளது. [த-2

## ஆதினத்தில் யோகாசன வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞானசம்பந்தர் ஆதினத்தில் மீண்டும் யோகாசன வகுப்புகள் கடந்த 13 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் ஆரம்பமானது.

இவ் வகுப்புகள் காலை 6 மணி தொடக்கம் 7 மணி வரை வெள்ளி,சனி தவிர்ந்த ஏனைய நாட்களில் நடைபெறும்.

இதில் ஆண்,பெண் இருபாலாரும் பங்கு பற்றலாம் என தெரிவிக்கப்படுகிறது. (த)

## தபால் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாவின் வலிகாமம் மேற்கு அஞ்சலகங்களில் பணியாற்றி வந்த 11 தபால் விநியோகஸ்தர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளது.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ்தேவானந்தா சம்பந்தப்பட்ட அமைச்சின் உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியதை அடுத்தே இந் நியமனம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிய வருகிறது.

அண்மையில் பதிவுத்தபால் விநியோகஸ்தர்கள் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து நியமனத்தை நிரந்தரமாக்கித் தருமாறு வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந)

## மருந்துத் தட்டுப்பாட்டினால் மந்திகை வைத்தியசாலை ஸ்தம்பிக்கும் நிலையில்!

(மந்திகை)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இன்னும் இரு வாரங்களுக்குத் தேவையான மருந்துப் பொருட்களே கையிருப்பில் உள்ளதாகவும், சத்திர சிகிச்சையின் பின் நோயாளிகளுக்கு வழங்கப்படும் மருந்துகளுக்குப் பெருந் தட்டுப்பாடு நிலவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இப்பகுதியில் இடம்பெயர்ந்த மக்கள் அதிகமாக வசிப்பதும், சிகிச்சை பெறுவோர் வீதம் அதிகரித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (ந – 2- 23)

**தற்கொலை...**

சென்று தமதுபதிவுகளைமேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

கொழும்பு நகரில் இதுவரை நடைபெற்ற குண்டு வெடிப்புகளின் போது ஆயுதங்கள், வெடிப் பொருட்கள் குண்டுகள் ஆகியன லொட்ஜ்களில் இருந்துதான் பாவிக்கப்பட்டு வந்தன என்றும் இதற்கு ஆதாரங்கள் இருப்பதாகவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார்.

எனவே நியாயமான காரணம் எதுவும் இன்றி எவரையும் லொட்ஜ்களில் தங்க இடம் அளிக்கக கூடாது என்றும் அவர் மேலும் கேட்டுக் கொண்டார். (வ)

**இந்தோனேசியா...**

இளைஞர்களாவர்.

இவ்விரு இளைஞர்களும் கடந்த 11ஆம் திகதி முதல் அகதி அந்தஸ்து கோரி யு.என்.எச்.சி.ஆர்.இன் அலுவலகம் முன்பாக உண்ணாவிரதம் இருந்ததாகவும் தற்போது இந்தோனேசிய நிலவரம் காரணமாக யு.என்.எச்சி. ஆரின் அலுவலகம் மூடப்பட்டதை அடுத்தே இவர்களின் உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டதாகவும் தெரியவருகிறது.

**ஐவர்கான்...**

இவர் திடீர்மரணவிசாரணை அதிகாரி என்பதும், இலங்கை தேசியப் பத்திரிகைகளின் பிராந்திய செய்தியாளர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

**தமிழ்க்குழுக்...**

அரசிடம்கேட்டுவருகிறார்கள் ஆனால் அவர்களுக்கு விடுதலைப் புலிகளிடமிருந்து உயிராபத்து இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் அவர்களிடம் இருந்து ஆயுதங்கள் களையப்படமாட்டாது.

தமிழ்க் கட்சிகளுக்கு அச்சுறுத்தல்கள் இருப்பதாகவும் அவர்களில் எத்தனையோ பேர் கொல்லப்பட்டிருப்பதாகவும் தேர்தல் நேரத்தில் அவர்களது பாதுகாப்புக்கு ஆயுதங்கள் வைத்திருக்க அனுமதிப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜனநாயக

## வன்னி வேட்பாளர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டது

(வவுனியா)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் போட்டியிடும் அரசியல் கட்சி வேட்பாளர்களுக்கு அடையாள அட்டைகளை 211வது கட்டளைத் தளபதி வழங்கியுள்ளார்.

வவுனியா தெரிவத்தாட்சி அதிகாரியின் சிபார்சின்பேரில் இந்த அடையாள அட்டைகள் வழங்கப் பட்டுள்ளன.

இதுவரை இந்தஅடையாள அட்டைகளை தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.டி.பி ஈ.பி.ஆர்.எல்.எவ் பெருமாள் அணியினர் பெற்றுள்ளனர்.

தமிழீழ விடுதலை இயக்கம் மக்கள் விடுதலை முன்னணி ஆகியனவும் இந்தஅடையாள அட்டைகளுக்கு விண்ணப்பித்ததாகவும் இவர்களுக்குவிரைவில் அடையாள அட்டைகள் வழங்க நடவடிக்கை எடுக்கவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## காலி, மாத்தறையில் தொடர் வெள்ளம் மீட்புப்பணியில் கடற்படைபடகுகள்

(கொழும்பு)

காலி, மாத்தறை ஆகிய களுத்துறை பகுதிகளில் வெள்ளம் பெருக்கில் அகப்பட்டுள்ளமக்களை மீட்கும் பணியில் கடற்படையினரின் படகுகளும், விமானப் படையினரின் ஹெலிகொப்டர்களும் ஈடுபட்டுள்ளன.

இம் மக்களுக்கு சமைத்த மற்றும் உலர் உணவுகள் மாத்தறை மாவட்ட சமூக சேவை அமைப்புக்களினால் வழங்கப்படுகின்றது.

கடந்த நான்கு நாட்களாக விடாது பெய்த மழை ஓய்ந்துள்ளதுடன் வெள்ளத்தின் அளவும் குறைந்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நாகம்ஸ்
(சுன்னாகம்)
விஜய், சிம்ரான்
நடித்த
துள்ளாத மனமும்

ஸ்ரீ செல்வா
[யாழ்ப்பாணம்]
பிரகாஸ்ராஜ், குஷ்பு
நடித்த

# நாகம்ஸ்

(சுன்னாகம்)

விஜய், சிம்ரான் நடித்த

## துள்ளாத மனமும் துள்ளும்

(ரீலீஸ்)

(இந்தியாவில் 200 நாட்களையும் கடந்த வெற்றிச் சித்திரம்)

தினசரி11.00-2.30(பு.நே

(கி-814)


பட்டதை அடுத்தே இவர்களின் உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டதாகவும் தெரியவருகிறது.


# ஸ்ரீ செல்வா

[யாழ்ப்பாணம்]

பிரகாஸ்ராஜ், குஷ்பு நடித்த

## சின்ன சின்ன கண்ணிலே

(புதிய வெளியீடு CDபிரதி(

10.30-2.00பழைய நேரம்

(கி-688)


விக்கப்படுகிறது. இதனால் அவர்களிடம் இருந்து ஆயுதங்கள் களையப்படமாட்டாது.

தமிழ்க் கட்சிகளுக்கு அச்சுறுத்தல்கள் இருப்பதாகவும் அவர்களில் எத்தனையோ பேர் கொல்லப்பட்டிருப்பதாகவும் தேர்தல் நேரத்தில் அவர்களது பாதுகாப்புக்கு ஆயுதங்கள் வைத்திருக்க அனுமதிப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜனநாயக வழிக்குதிரும்பியதமிழ்க்குழுக்களிடம் ஆயுதம் களைவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ்; படைத்தளபதி பத்திரிகையாளர் மகா நாட்டின் போது கூறியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

(வ)

## மீட்புப்பணியில் கடற்படைபடகுகள்

(கொழும்பு)

காலி, மாத்தறை ஆகிய களுத்துறை பகுதிகளில் வெள்ளம் பெருக்கில் அகப்பட்டுள்ளமக்களைமீட்கும் பணியில் கடற்படையினரின் படகுகளும், விமானப் படையினரின் ஹெலிகொப்டர்களும் ஈடுபட்டுள்ளன.

இம் மக்களுக்கு சமைத்த மற்றும் உலர் உணவுகள் மாத்தறை மாவட்ட சமூக சேவை அமைப்புக்களினால் வழங்கப்படுகின்றது;

கடந்த நான்கு நாட்களாக விடாது பெய்த மழை ஓய்ந்துள்ளதுடன் வெள்ளத்தின் அளவும் குறைந்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(செ)

## அகதிகள் தமிழகம் சென்றனர்

)சென்னை)

ஈழத்தமிழ் அகதிகள் 14 பேர் நேற்று அதிகாலை தனுஸ்கோடி வந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது;

தலைமன்னாரிலிருந்து படகு ஒன்றின் மூலம் புறப்பட்ட இவர்கள் தனுஸ்கோடியிலுள்ள கோதாண்டராமன் கோவிலடியில் இறங்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

(ந-4)


வீணையே உங்கள் இன்னம்! சேவையே எங்கள் எண்ணம்!

சுத்தச் சுயநலன்களை சுருட்டி வீசி
மக்களின்பொதுநலன்களை மேம்படுத்திட
அர்ப்பணிப்புடன் சேவையாற்றிவரும்
ஈ.பி.டி.பியை ஆதரிப்பீர்!
உங்கள் வாக்கு வீணைக்கே

# (ஈ. பி. டி. பி)





(இ/736)

இன்று வரை ஈ. பி. டி. பி யின் ஏற்பாட்டில் யாழ் மாவட்டத்தில் வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் 198பேர் வரை நிரந்தர நியமனம் பெற்றுள்ளார்கள்.



இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ விதாபனத்தாரால் இல; 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில்2000 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 23ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.